செ.வெ. எண்: 423 நாள்: 7.7.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க,
சென்னை அண்ணாநகர் பகுதிகளில் உள்ள
சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில்
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லுர் கே.ராஜு அவர்கள்
திடீர் ஆய்வு.

*******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று காலை (7.7.2011) காலை 10.00 மணி அளவில் சென்னை அண்ணாநகரில் உள்ள பூங்காநகர் கூட்டுறவு மொத்தவிற்பனை பண்டகசாலையின் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி, கூட்டுறவு மருந்தகம், எரிவாயு பிரிவு மற்றும் காய்கறி மற்றும் பழ வகைப் பிரிவுகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லுர் கே.ராஜு அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கூட்டுறவு மருந்தகத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தபோது, மருந்தாளுனர் அடையாள அட்டை அணியாமலும், வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடாமலும் இருந்ததை கண்டுபிடித்து எச்சரிக்கை செய்து இனிவருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறகூடாது என கண்டித்து நுகர்வோர்களுக்கு தேவையான மருந்துகளை இருப்பில் வைத்துக்கொள்ளுமாறும், மருந்துகள் இல்லை என்று யாரிடமிருந்தும் புகார் வரக்கூடாது என்றும், விற்பனையை விரைந்து செயலாற்றிடவும் அறிவுரை வழங்கினார்.

அதன் பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சிறப்பங்காடியில் உள்ள அனைத்து பொருட்களையும் ஆய்வு செய்து விலை, எடை, தயாரிக்கும் நாள் மற்றும் காலாவதி நாள் போன்றவற்றை சரிபார்த்து காலாவதியான பொருட்களை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக்கூடாது என எச்சரிக்கை செய்ததோடு, காலாவதியான பொருட்கள் இருப்பின் அதனை உடனடியாக அப்புறப்படுத்தவும் உத்தரவிட்டார்.

அதன் பின்னர் காய்கறி மற்றும் பழவகைப் பிரிவுகளை பார்வையிட்டு தரம் வாய்ந்த காய்கறி மற்றும் பழ வகைகளை விற்பனை செய்ய உத்தரவிட்டதுடன் அனைத்து பணியாளர்களுக்கும் அடையான அட்டை வழங்கிட சிறப்பங்காடியின் தனி அலுவலர் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் குறைகளை கேட்டபோது, பொதுமக்கள் அனைவரும் மருந்துகள் உட்பட அனைத்து பொருட்களும் தரமாகவும் விலை குறைவாகவும் கிடைப்பதாக தெரிவித்தனர்.

அப்போது, சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியின் தனி அலுவலர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று காலை (7.7.2011) காலை 10.00 மணி அளவில் சென்னை அண்ணாநகரில் உள்ள பூங்காநகர் கூட்டுறவு மொத்தவிற்பனை பண்டகசாலையின் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி, கூட்டுறவு மருந்தகம், எரிவாயு பிரிவு மற்றும் காய்கறி மற்றும் பழ வகைப் பிரிவுகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லுர் கே.ராஜு அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**